# FAMOUS MORAL STORIES

Indian Vedic School
Language of the Gods

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 11



























# INDEX


| | |
|---|---|
| MAGICAL POWER | 1-6 |
| MARK'S ADVICE | 7-13 |
| MESMERISING-RING | 14-23 |
| MIKASUKI | 24-30 |
| UNGREATFUL JACKAL | 31-39 |
| NOBLE CAUSE | 40-46 |
| TWO MINISTERS | 47-54 |
| OPTIMISM | 55-61 |
| PATRIOTISM & LOYALTY | 62-68 |


மந்திர சக்தி


தந்தை ஜான் என்ற ஒரு அறிஞர் இருந்தார்.
ஒரு நாள் அவர் திரும்பி வரும் வழியில், கனத்த மழை பெய்து கொண்டிருந்தது. அவர் ஒரு மரத்தின் அடியில் நின்று கொண்டிருந்தார். ஆனாலும் அவர் நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார்.
ஓஓஓ..... நான் முழுவதும் நனைந்துவிட்டேன்
மழை விட்ட பின்னர் அவர் தனது வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.
வரும் வழியில் ஆற்றங்கரையில் ஒரு பையன் அமர்ந்து கொண்டிருப்பதையும் அவனது மாடுகள் மேய்ந்து கொண்டிருப்பதையும் கண்டார்.
ஆச்சரியம், இப்போதுதானே கனத்த மழை பெய்தது. அவனைத் தவிர சுற்றியுள்ள அனைத்துமே நனைந்து இருக்கின்றதே.


தந்தை ஜான் அவனைச் சுற்றிலும் ஏதேனும் மரங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தார்.ஆனால் எதுவுமே இல்லை.
சுற்றிலும் எந்த ஒரு மறைவிடமும் இல்லை, பின்னர் எப்படி அவனால் நனையாமல் இருக்க முடிந்தது. அவனுக்கு ஏதோ மந்திரம் தெரிந்திருக்க வேண்டும். நாம் அவனிடம் கேட்கலாம்.
இப்போதுதான் இங்கு ஒரு பலத்த மழை பெய்தது. சுற்றிலும் நனைந்துள்ளன. ஆனால் நீ மட்டும் எவ்வாறு நனையாமல் இருக்கிறாய்?
மகனே, நீ மந்திரம் ஏதாவது செய்தாயா, என்னிடம் அதனைப் பகிர்ந்து கொள்வாயா?
ஐயா, எனக்கு எந்த மந்திரமும் தெரியாது. நான் ஒரு சாதாரண விவசாயி. எனக்கு எழுதப் படிக்க கூட தெரியாது.



கேள் மகனே, நான் அதனை நம்பமாட்டேன். சரி, நாம் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்.... நீ எனக்கு சொல்லிக்கொடுத்தால் நான் அதற்குப்  பணம் கொடுக்கிறேன்.
சரி.... இங்கே பார்
தந்தை ஜான் தனது விரலை உயர்த்தி விரலைச் சொடுக்கியதும் அவரது கையில் ஒரு புல்லாங்குழல் வந்தது.
மகனே, இதனை எடுத்துக்கொள். இது உனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஒரு இடத்தில் அமர்ந்து இந்த புல்லாங்குழலை வாசித்தால், உனது பசுக்கள் எங்கு சென்றிருந்தாலும் உன்னை வந்து அடையும். நீ அவற்றைத் தேடவேண்டாம்.
பையன் புல்லாங்குழலை வாசித்தான். ஆச்சரியப்படும் வகையில் தொலைவில் இருந்த பசுக்கள் அனைத்தும் அவன் இருக்கும் இடத்தை அடைந்தன. ஆஹா... நன்றி சார்.


மகனே இப்போது எனக்கு சொல்லித் தருவாயா.
ஐயா, ஒவ்வொரு நாளும் மதிய உணவை நான் ஒரு பாத்திரத்தில் கொண்டு வருவேன். மழை பெய்தபோது அப்போதுதான் நான் மதிய உணவை முடித்துவிட்டிருந்தேன்.
ஓ....
உடனடியாக நான் எனது சட்டையைக் கழற்றி அதனை எனது பாத்திரத்தில் போட்டுவிட்டேன்.
மழை நின்றவுடன் நான் எனது சட்டையைப் போட்டுக்கொண்டேன். அவ்வளவுதான்... இதில் மந்திரம் எதுவும் இல்லை. நேரத்திற்கு தகுந்தாற்போல நாம் செயல்படுவதில்தான் இது இருக்கின்றது
அடுத்த முறை நீங்களும் ஒரு பாத்திரத்தை வைத்துக் கொள்ளுங்கள். அது தேவைப்படும் நேரத்தில் உங்களுக்கு உதவும்.


தந்தை ஜான் தனது முட்டாள்தனத்தை நினைத்து வருந்தி அங்கிருந்து சென்றார்.
சில நேரங்களில் படித்த மனிதர்கள் கூட முட்டாள்தனமான தவறுகளைச் செய்வது உண்டு.
பையன் தனக்கு மந்திரப் புல்லாங்குழல் கிடைத்ததை நினைத்து மகிழ்ச்சியடைந்தான்.
முற்றிற்று


மார்க்கின் அறிவுரை


மார்க் மற்றும் பீட்டரின் வயல்கள் அருகருகே இருந்தன.
இந்த வருடம் மார்க்கின் வயலில் நல்ல விளைச்சலும் பீட்டரின் வயலில் மோசமான விளைச்சலும் இருந்தது.
மார்க், என்ன காரணம் எனது வயலில் குறைந்த அளவிலும் உனது வயலில் சிறப்பாகவும் விளைச்சல் ஆகியுள்ளது ?


இவை அனைத்தும் எனது நற்செயல் காரணமாக நடந்துள்ளது.
நான் வறுமையிலுள்ள மக்களுக்கு தொண்டும் மற்றும் நற்செயல்களும் செய்துள்ளேன்.
ஒவ்வொரு நாளும் நான் யாரேனும் என்னைக் குற்றஞ் சொல்லக்கூடாது என்றும்,
மற்றவர்கள் யாரேனும் என்னைக் குற்றம் சொன்னால் நான் அதனை புறக்கணிக்க வேண்டும் என்றும் கடவுளிடம் வேண்டுவேன்.


பீட்டர் மார்க்கைத்ஹொடர்ந்து தானும் அதே போன்ற செயல்களைச் செய்வது என்று முடிவு செய்தான். மோசமான விளைச்சல் காரணமாக அவன் நிதி சார்ந்த பிரச்சினைகள் பலவற்றைச் சந்தித்தான்.
பலர் பீட்டரின் முட்டாள்தனத்தைக் கண்டு சிரித்தனர், ஆனால் அவற்றை எல்லாம் புறக்கணித்து நற் செயல்களைச் செய்தான்.
ஒரு நாள் பீட்டர் தனது நிலத்தில் உழுது கொண்டிருந்தபோது திடீரென்று அவனது இயந்திரம் எதன்மீதோ மோதுவதைக் கண்டான்.
அதில் இரண்டு ஜாடிகளில் ஒன்றில் தங்கக் காசுகளும் மற்றும் மற்றொன்றில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட உலோகத் தகடும் இருப்பதைக் கண்டான். பீட்டர் இந்த பொருட்களை கிராமத்தலைவரிடம் ஒப்படைப்பது என்று முடிவு செய்தான்.


இந்த வயல் பல தலைமுறைகளாக உங்களது முன்னோர்களுக்குச் சொந்தமாக இருந்துள்ளது. உங்களது முன்னோர்கள் எதிர்கால சந்ததியினருக்காக இதனை தங்களது வயல்களில் பாதுகாத்துள்ளனர்.
இந்த அதிர்ஷ்டத்துடன் சேர்த்து பீட்டர் அந்த வருடம் நல்ல விளைச்சலையும் கண்டான்.
அதேசமயம், மார்க்கின் வயலில் உள்ள பயிர்கள் வாடி விளைச்சல் இல்லாது போயிற்று.


நான் இந்த வருடம் நீ கூறியவாறு நடந்து எனது வயலில் நல்ல விளைச்சலைக் கண்டேன். ஆனால் எவ்வாறு உனக்கு மட்டும் விளைச்சல் நன்றாக இல்லாது போயிற்று?
பீட்டர், இது எனது தவறினால்தான்.
கடந்த வருடம், எனக்கு ஏற்பட்ட அமோகமான விளைச்சல் காரணமாக நான் தலைக்கனம் கொண்டும் மற்றும் சுயநலமானவனாகவும் ஆகிவிட்டேன்.
நீ என்னிடம் அறிவுரை கேட்டு வந்தபோது, நான் நிறைய நற்செயல் செய்வதாயும் தொண்டு செய்வதாயும் உன்னிடம் பொய் கூறிவிட்டேன்.


நான் என்ன கூறினேனோ அதையே நீயும் செய்தாய். அதைக் கண்டு நான் கேலி பேசினேன். என்னை மன்னித்து விடு.
நீ என்னென்ன என்னிடம் கூறினாயோ அதிலிருந்து நான் ஆதாயம் அடைந்தேன். அதற்கான பலனை நான் உனக்கு அளிக்கப் போகிறேன்.
கடவுள் உன்னை தண்டிக்க வேண்டும் என்று நினைப்பது தவறானது.
பீட்டர் மார்க்கிற்கு ஒரு பை நிறைய தங்கக் காசுகளை அளித்தான்.
இதனை ஏற்றுக்கொள். எதிர்காலத்தில் நாம் இருவரும் இணைந்து பணியாற்றலாம்.
அன்றிலிருந்து, அந்த கிராமத்திலுள்ள அனைவருமே ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் எந்தவிதமான தங்க ஜாடியையும் கண்டறியவில்லை ஆனால் ஒருவருக்கொருவர் நட்புடன் இருந்தனர்.
முற்றிற்று


மயக்கும் மோதிரம்


தண்டகாரண்யம் என்ற ஒரு காட்டிலிருக்கும் ரிஷி கேஸத்தை சந்திப்பதற்காக ஒரு வயதான பெண்மணி ஒரு குழந்தையுடன் வந்தார்.
வாழ்த்துக்கள்.... ஓ ரிஷி, உங்களது ஆசிரமத்தில் எங்களுக்கு அடைக்கலம் தாருங்கள். இந்த குழந்தை சந்திரகிரி ராஜ்ஜியத்தின் இளவரசி. எதிரிகள் அந்த நாட்டிலுள்ள அனைவரையுமே கொன்றுவிட்டனர், மிகவும் சிரமப்பட்டு நான் இங்கு தப்பி வந்துள்ளேன்.
ஓ... நிச்சயமாக நீங்கள் இங்கு தங்கிக் கொள்ளலாம்.
இக்குழந்தை நாகவல்லி என்று அழைக்கப்படுவாள்
சில வருடங்கள் கழித்து அந்தப் பெண்மணி இறந்து போனார். ரிஷி அந்த சின்னக் குழந்தையைக் கவனித்துக் கொண்டார்.
அவள் ஒரு அழகான பெண்ணாக வளர்ந்தாள்.


தந்தையே நீங்கள் பூஜை செய்வதற்கு மலர்களையும் மூலிகைகளையும் கொண்டு வருவதற்கு நான் காட்டிற்கு செல்லலாமா?
மகளே, நீ இதுவரை ஆசிரமத்தைத் தவிர எங்குமே சென்றதில்லையே...
அவள் இதுவரை எதுவுமே கேட்டதில்லை, ஆதலால் அவர் இதனை மறுக்கவில்லை.
சரி மகளே, ஆனால் கவனமாகச் செல். இந்த மாலையை உன்னிடம் வைத்துக்கொள், நீ ஆபத்தில் இருப்பதை உணர்ந்தால் இதனை தூக்கி எறி.
நாகவல்லி காட்டின் அழகை ரசித்துக் கொண்டே சென்றாள்.
அங்கு ஒரு அருவி இருப்பதைப் போலத் தெரிகிறதே.


அங்கு அருவியில் ஒரு பெண் குளித்துக் கொண்டிருந்தாள்.
ஆஹா... எத்தனை அழகு
ஆஹா... எத்தனை அழகு
நீ யார்? நீ மிகவும் அழகாக இருக்கிறாய்.
நான் தான் தேவதை. சொர்க்கத்திலிருந்து வந்துள்ளேன்.


ஓ... அது என்னுடைய மோதிரம். அதனை என்னிடம் தா.
நாகவல்லி மோதிரத்தைப் பிரிய விரும்பவில்லை
நான் தரமாட்டேன். இ து என்னுடையது.
இருவரும் மோதிரத்திற்காக வாக்குவாதம் செய்தனர்.
அருகில் சிம்ஹபுரிவாசத்தின் அரசன் வேட்டைக்கு இடையே ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தான்.


என்ன அங்கு சத்தம்? போய் அவர்களை அழைத்து வாருங்கள்.
அவர்கள் இருவரும் சண்டையிட்டதற்கான தத்தமது காரணங்களைக் கூறினர்.
இது உண்மையிலேயே மயக்கும் மோதிரமாகத்தான் இருக்கிறது. இது யாருக்குப் பொருந்துகிறது என்று பார்ப்போம்.
இது இருவரின் விரல்களிலும் பொருந்துகிறது.


இதனை நிரூபியுங்கள்
தேவதை மோதிரத்தை தங்கமாக மாற்றினாள்.
சரி பெண்ணே, இது உன்னுடையதுதான். இதனை எடுத்துக்கொள்.
அரசே, நான் கோபப்படுவதற்காக என்னை மன்னியுங்கள். அவள் ஏதோ மாயாஜாலம் செய்துவிட்டாள், நீங்கள் தீர்ப்பளித்துவிட்டீர்கள்... நானும் மாயாஜாலம் செய்வேன், இதோ பாருங்கள்...


நாகவல்லி ரிஷி கொடுத்த மாலையை
எடுத்து அரசரிடம் வீசி எறிந்தாள்.
அரசரின் முகம் கழுதையாக மாறியது.
அய்யோ.. என்ன இது?
பெண்ணே, என்ன செய்தாய்?
என்னை மன்னியுங்கள், ஆனால் இவ்வாறு நடக்கும் என்பது எனக்குத் தெரியாது.
இதற்கிடையே, ரிஷி நாகவல்லியைத் தேடி அந்த இடத்திற்கு வந்தார்.
என்ன நடந்தது மகளே?


மந்திரி நடந்தவற்றை எல்லாம் ரிஷிக்கு விவரித்தார்.
ரிஷி நாகவல்லி நடந்துகொண்டதைக் கேட்டு அவளைக் கண்டித்தார்.
அரசே, அவளது சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். நான் உங்களது நிலைமையை மீட்க முடியாது. ஆனால் நீங்கள் உங்களது முதல் குழந்தையைப் பார்க்கும்போது உங்களது பழைய தலையைப் பெறுவீர்கள் என்ற வரத்தை என்னால் அளிக்க முடியும். அதுவரை எதுவுமே செய்ய முடியாது.
பல பெண்கள் சுயம்வரத்திற்காக வந்தும் அவரது கழுதைத் தலையைக் கண்டவுடன் பயந்து ஓடினர்.
எனது தவறினால் தானே அரசர் இந்த நிலைமையில் உள்ளார்.


அரசே, எனது தவறினால் தானே நீங்கள் இந்த நிலைமையில் உள்ளீர்கள். நானே இதனைச் சரிசெய்கிறேன். நானே உங்களை மணந்து கொள்கிறேன்.
திருமண விழா
அவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்தது
சில மாதங்கள் கழித்து நாகவல்லிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.
ரிஷி கூறியதைப்போல அரசர் அவரது மகனைக் கண்டதும் தனது பழைய முகத்தைத் திரும்பப் பெற்றார்.
முற்றிற்று


மிகாஸூகி


ஃப்யூஜிமா மலையடிவாரத்தில் ஒரு கணவனும் மனைவியும் வசித்து வந்தனர். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினர். ஆனால் அவர்களுக்கு குழந்தை இல்லாததால் மிகுந்த கவலையில் இருந்தனர்.
குழந்தை இல்லாததால் எங்களது வாழ்க்கை கவலைக்குரியதாக இருக்கிறது. எங்களுக்கு ஒரு அழகான பெண் குழந்தை அளியுங்கள்.
ஒரு நாள்
வெளியே வந்து பாருங்களேன், கடவுள் எனக்கு ஒரு அழகான பெண் குழந்தையை அளித்துள்ளார்.
என்ன சொல்கிறாய், உனக்கென்ன பைத்தியமா?


அங்குதான் இருந்தாள்...
நான் பார்த்தேன்.
வா நாம் மலையில்
சென்று பார்க்கலாம்.
நீ யார்
பெண்ணே?
நான்தான் இளவரசி மிகாஸுகி. எனது தாய்
சந்திரா வினிதா நீங்கள் மகிழ்ச்சியற்று இருப்பதால்
என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்.



மகள் கிடைத்ததை நினைத்து இருவருமே மகிழ்ச்சியுடன் இருந்தனர்.
சில வருடங்கள் கழித்து...
அவளை அரசர் மிகாடோவுக்கு மிகவும் பிடித்துவிட்டது
அழகே... நீ யார்; நான் உன்னை மணம் செய்து கொள்ள விரும்புகிறேன்.
நான் சந்திரலோகத்தின் இளவரசி மிகாஸுகி. நான் பூமியிலுள்ள யாரையுமே திருமணம் செய்துகொள்ள முடியாது. நான் இங்குள்ள குழந்தையற்ற ஒரு பெற்றோரை மகிழ்விப்பதற்காக வந்துள்ளேன். இப்போது நான் திரும்பிச் செல்ல வேண்டிய நேரமும் நெருங்கிவிட்டது.


அந்த உரையாடலை கணவனும் மனைவியும் கேட்டனர்.
அன்பே, என்னால் நீ இல்லாமல் வாழ முடியாது.
எங்களை விட்டுச் செல்லாதே.
இளவரசி.. நீ இங்கேயே தங்கி என்னை திருமணம் செய்து கொள்.
அய்யோ... இல்லை என்னால் முடியாது.
அரசர் தனது வீரர்களை அந்த பெண் தப்பித்துச் செல்லாதவாறு பார்த்துக்கொள்ளுமாறு கூறுகிறான்.
ஒரு நாள் சந்திர வினிதா


மகளே, நீ கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டு என்னால் இங்கு வராமல் இருக்க முடியவில்லை. நீ அந்த பெற்றோர்களை சந்தோஷப்படுத்திவிட்டாய், என்னால் நீ இல்லாமல் இருக்க முடியாது. நாம் செல்லலாம்.
நிலைமையை புரிந்துகொண்ட மிகாசுகி, தன் தாயுடன் திரும்ப முடிவு எடுக்கிறாள்.
அவள் தான் திரும்பிச் செல்வதை விரும்பினாள் ஆனால் அந்த பெற்றோர்களை விட்டுச் செல்வதை விரும்பவில்லை.


தாயுடன் திரும்ப முடிவு எடுக்கிறாள். தாயுடன் திரும்ப முடிவு எடுக்கிறாள்.
தயவுசெய்து வருத்தப்படாதீர்கள். மிகாசுகி அவள் உலகத்திற்கு திரும்ப வேண்டியது தவிர்க்க இயலாதது. அவள் உங்கள் மேல் கொண்ட பாசத்தையும் அன்பையும் உங்களுக்குத் தெரிவிக்கவே எங்களை அனுப்பிவைத்தாள்.
இன்றும் ஜப்பானில் மின்மினிப் பூச்சிகள் உண்மையான அன்பின் தூதுவர்களாக கருதப்படுகின்றன.
முற்றிற்று


நன்றிகெட்ட நரி
各花入各眼


வணக்கம் மாஸ்டர் சின் பம். நான் போராளிகளைக் கட் டுப்படுத்த வேண்டும்.
மகனே, தேவையில்லாது இரத்தத்தை வீணாக்காதே. போருக்குச் செல்லவேண்டாம்.
நான் காரணமில்லாமல் யாரையும் கொல்ல மாட்டேன் என்று உறுதியளிக்கிறேன்.
மாஸ்டர், வெற்றி.. வெற்றி... நமது அரசர் போராளிகளைக் கட்டுப்படுத்திவிட்டார்.
நல்லது.
மாஸ்டர், அரசர் போரில் தோற்றவர்களைப் பின்தொடர்ந்து சென்று அவர்களைக் கொன்றுள்ளார்.
இது மோசமானது, நான் அங்கு செல்ல வேண்டும்.


ஆசிரியர் பயணம் மேற்கொள்ளத் தீர்மானிக்கிறார். தனது கழுதையில் ஏறி பயணிக்கும்போது நாட்டில் மக்கள் சந்தோஷமாக இருப்பதைப் பார்க்கிறார்.
ஆசிரியர் யாருமில்லாத சாலையில் கழுதை மீது பயணம் செய்கிறார். தொலைவில் ஒரு நரி அவரை நோக்கி ஓடி வருகிறது.
ஏன் இவ்வளவு வேகமாக ஓடுகிறாய்? யாரையும் கண்டு பயந்தீர்களா?
ஒரு அரசர் அவரது வீரர்களுடன் சேர்ந்து எங்களைக் கொல்ல வருவதாக கேள்விப்பட்டேன்.
அவர்கள் குதிரையில் வருகின்றனர், உன்னால் எவ்வளவு தூரம் ஓட முடியும்? நான் உன்னை மறைத்து உன்னைக் காப்பாற்ற முடியும்.


ஆசிரியர் தனது பையிலிருந்து பேப்பரை வெளியே எடுக்கிறார்.
நரி அந்தப் பையினுள் செல்கிறது.
அரசரும் வீரர்களும் ஆசிரியரின் அருகில் வருகின்றனர்.
மாஸ்டர், நீங்கள் ஏதேனும் நரியைப் பார்த்தீர்களா?
இல்லை நான் பார்க்கவில்லை.
நான் பொய் கூறியதே இல்லை.


மாஸ்டர், நாங்கள் உங்களது பையைப் பார்க்க விரும்புகிறோம். நீங்கள் எங்களுக்கு உதவ முடியுமா.
நீங்கள் என்னை நம்ப மாட்டீர்களா?
மாஸ்டர், நரி நமது மக்களைக் கொல்கிறது. நான் பாதுகாக்க வேண்டுமானால் அதனைக் கொல்ல வேண்டும். ஆனால் உங்களது கட்டளையே இறுதியானது.
அவ்வாறானால், நீங்கள் திரும்பி ராஜ்ஜியத்திற்கு செல்லுங்கள்.


அரசரும் வீரர்களும் திரும்பிச் செல்கின்றனர்.
நரியை வெளியே விடுகின்றார்.
எனக்குப் பசியாக உள்ளது. உடனே எனக்கு உணவளியுங்கள்.
நீங்கள் எனது வாழ்க்கையைக் காப்பாற்றியதாக நினைக்கிறீர்களா? எங்கேனும் நரி பிரெட் சாப்பிடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? நான் மாமிசம் மட்டுமே சாப்பிடுவேன், நீங்கள் அல்லது உங்களது கழுதையோ தான் எனக்கான உணவு .


இதைக் கேட்ட கழுதை ஓடிவிடுகிறது.
இதுபோன்ற ஒழுங்கீனமான கழுதையை வைத்திருப்பது உங்களது தவறு எனவே நீங்கள்தான் எனது உணவு.
நான் உனது உயிரைக் காப்பாற்றியுள்ளேன். நீ எப்படி நன்றிகெட்டவனாக இருக்க முடிகிறது.
நீங்கள் என்னைக் காப்பாற்றி இருக்காவிட்டால், இது போன்ற பசிப்பிணியை நான் அனுபவித்திருக்க மாட்டேன்.
அங்கு ஒரு விவசாயி வருகிறார்.
சகோதரனே, நீங்கள் தான் கூறவேண்டும், நரி என்னைக் கொல்வதில் ஏதேனும் நியாயம் இருக்கிறதா?


அவன் பொய் சொல்கிறான். அவன் என்னை பையினுள் அடைத்து அரசரிடம் ஒப்படைக்க முற்பட்டான். மிகவும் சிரமப்பட்டு நான் வெளியே வந்துள்ளேன்.
இப்போது கூறுங்கள், இந்த வயதான மனிதனை கொல்வது நியாயம்தானே?
நீ இவரைக் கொல்லத்தான் வேண்டும்.ஆமாம், நீ எவ்வாறு இந்த சின்ன பையில் நுழைந்தாய்?
இந்த பையைப் பிடியுங்கள், நான் எவ்வாறு நுழைந்தேன் என்று காண்பிக்கிறேன்.
விவசாயி பையைக் கட்டி, கம்பினைக் கொண்டு நரியை அடித்தான்.
வேண்டாம் மகனே, அது இறந்துவிடும்.


மகளே, ஏன் அழுகிறாய்? நீ யார்?
இந்த நரி எனது மகனைக் கொன்று விட்டது.இந்த சம்பவத்தை நான் அரசரிடம் கூறினேன். ஆனால் அவரால் செய்ய முடியாததை இவர் செய்துவிட்டார்.
விவசாயி வேறு யாரும் இல்லை, அரசர்தான் என்பதை அந்தப் பெண் அறிந்திருக்கவில்லை. விவசாயியின் உண்மையான ரூபம் ஆசிரியருக்குத் தெரியவந்தது.
மகனே, நான் இன்று உன்னிடமிருந்து ஒரு பெரிய பாடம் கற்றுக்கொண்டேன். நீ கருணையுடன் இருக்கலாம் ஆனால், உன்னைக் கொல்ல வருபவர்களிடம் நீ கருணை காட்டக்கூடாது, அது அபாயமாகும்.
முற்றிற்று


உன்னத நோக்கம்


திரு ஜான்ஸன் மிகவும்
நோய்வாய்ப்பட்டு படுக்கையில்
வாழும் ஒரு வயதான மனிதர்.
இவரது நிலைமை மோசமாக உள்ளது; நான் அவருக்கு மருந்து
அளித்துள்ளேன். ஆனால் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.
பணப்பெட்டியை எனது அருகில்
கொண்டு வந்து வையுங்கள்.
இந்த நிலைமையிலும் அவர்
பணத்தைப் பற்றியே கவலைப்பட்டார்.


திரு ஜான்ஸன் தனது பேரன் ஜோவைத் தவிர வேறு யாரையுமே நம்பியதில்லை.
திரு ஜான்ஸன் இந்த நிலைமையிலும் தினமும் தனது பணத்தை எண்ணிக்கொண்டே இருப்பார்.
எனது கணக்கு தப்பாது; கடந்த சில நட்களாக தினமும் ஒரு காயினைக் காணவில்லை.
திரு ஜான்ஸன் தனது தொலைந்து போன காயின்களால் தனது குடும்பத்தினரிடம் கோபம் கொண்டார்.
யாரோ எனது பணத்தை திருடிவிட்டனர்.


நான் இன்று
விழித்திருந்து திருடனைப்
பிடிக்கப் போகிறேன்.
ஜோ தனது தாத்தா தூங்குவதாக நினைத்தான்.
திரு ஜான்ஸன் கவனித்துக்கொண்டிருந்தார்.
திருடன் திருடன்


ஜோவின் தந்தை இது
தெரிந்தவுடன் அவனை அடித்தார்.
இந்த வயதிலேயே இவன் திருடினால், இன்னும் வளர்ந்த பின்னர்?
பேராண்டி! நான் உன்னிடம் இதனை எதிர்ப்பார்க்கவே இல்லை நீ ஒரு வயதான மனிதரின் நம்பிக்கையைக் குலைத்து விட்டாய்.
நான் யாருக்காக சேமிக்கிறேன் என்று நீ நினைக்கிறாய்?
தாத்தா என்னை நம்புங்கள், நான் ஒருபோது உங்களது நம்பிக்கையைக் குலைக்க மாட்டேன். நான் பணத்தை எந்த விதமான தவறான நோக்கத்திற் காகவும் பயன்படுத்தவில்லை.



தாத்தா, நீங்கள் இதுவரை
யாருக்கும் உதவியதே
இல்லை என்று
கிராமவாசிகள் கூறினர்.
அவர்கள் நீங்கள் சொர்க்கத்திற்கு
செல்லப்போவதில்லை என்று கூறினர்.
உங்களது பணத்தை வைத்து
இல்லாதவர்களுக்கு உதவினால்
நீங்கள் சொர்க்கத்திற்கு செல்வீர்கள்
என்று நினைத்தேன்.
இதனால்தான் நான் ஒவ்வொரு நாளும்
ஒரு காயினை இல்லாதவர்களுக்கு
வழங்கினேன். நீங்கள் நம்பவில்லை
என்றால் கிராம மக்களிடம் கேளுங்கள்.
கிராமவாசிகளிடம் குடும்பத்தினர் கேட்டபோது
ஜோ கூறுவது சரிதான் என்பது தெரிந்தது.


இல்லாதவர்களுக்கு கொடுத்ததன் மூலம் நான் சொர்க்கத்திற்குச் செல்வேன். ஆனால் திருடியதால் நீ நரகத்திற்குச் செல்வாய் என்பதை நினைத்துப் பார்த்தாயா?
நான் இன்னும் சின்னப் பையன்தான், நான் இப்போது தவறு செய்தாலும், பின்னர் நன்மை செய்துவிடுவேன் ஆனால் உங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்காதே.
திரு ஜான்ஸன் தனது பேரன் தனக்காக அக்கறை கொண்டதை எண்ணி மகிழ்ந்து போனார்.
ஜோ, உன்னால் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்.
திரு ஜான்ஸன் உயிருடன் இருக்கும் வரை இல்லாதவர்களுக்கு உதவி செய்தார்.
முற்றிற்று


இரண்டு மந்திரிகள்


அரசன் பேட்ரிக்ஸ் தீப்ஸ் ராஜ்ஜியத்தின் திறமைவாய்ந்த அரசன். அவனுக்கு க்ரியான் மற்றும் தாமென் என்ற சாதுவான இரண்டு இளவரசர்கள் இருந்தனர்.அது அரசனை மிகவும் கவலையடையச் செய்தது.
ஒரு நாள் அரசன் அவனது ஆலோசகர் ஏகஸை அழைத்து தனது மகன்களைப் பற்றி பேசினார்.
நான் இளவரசர் க்ரியான் மற்றும் தாமென் மீது கவலையாய் உள்ளேன்.
அரசே, நீங்கள் ஏன் அவர்களை இரு வேறு மாகாணங்களின் அரசர்களாக்கக் கூடாது.


நம்மால் இயலும் ஆனால், அவர்கள் சரிவர ஆட்சி செய்யவில்லை என்றால், அந்த மாகாணங்கள் சிரமத்திற்கு உள்ளாகும்.
அதுதான் உங்களின் கவலை என்றால், நான் எனது மகன்கள் அலெக்ஸ் மற்றும் அப்போலோவை அவர்களுடன் அனுப்புகிறேன். அவர்கள் இருவருமே மிகவும் புத்திசாலிகள்.
அரசருக்கு ஏகஸின் ஆலோசனை பிடித்திருந்தது. தனது இரண்டு மகன்களுக்கு சேர்ந்து மகுடம் அணிவித்து அலெக்ஸ் மற்றும் அப்போலோவை மந்திரிகளாக நியமித்தார்.
இரு இளவரசர்களுமே தத்தமது மாகாணங்களைச் சரிவர பார்த்துக்கொண்டனர்.
சில மாதங்கள் கழித்து.... மந்திரி ஏகஸின் மனைவி திடீரென்று இறந்து விட்டார். ஏகஸ் மன வருத்தத்தில் இருந்ததால், அவரால் தனது பணிகளில் கவனம் செலுத்தமுடியவில்லை.
ஒரு நாள் மந்திரி ஏகஸ் அரசரிடம் சென்றார்...
அரசே, நான் இப்போது ஓய்வெடுக்க விரும்புகிறேன். எனக்கு வயதாகிவிட்டது மற்றும் என்னால் அரசவைக்கு வருவதற்கு நேரம் ஒதுக்க முடியவில்லை.
எனக்குப் புரிகிறது, நீங்கள் ஓய்வு பெறுவதற்கு முன் தயவு செய்து உங்களது இடத்திற்கு தகுதியான ஒருவரை நியமிக்க எனக்கும் உதவுங்கள்.


அரசே அது என் கடமை. எனது இரு மகன்களுமே அந்தப் பதவிக்குத் தகுதியானவர்கள்.
ஓ! நல்லது..
நாம் அவர்களது மாகாணங்களுக்குச் சென்று அவர்கள் அந்தப் பதவிக்குப் பொருத்தமானவர்களா என்று பார்ப்போம்.
நல்ல யோசனை, ஏற்பாடு செய்யுங்கள்.
அரசரும் ஏகஸூம் க்ரியானின் மாகாணத்திற்குச் சென்றனர்.
இருவரும் சென்றபோது க்ரியானும் அலெக்ஸூம் முக்கியமான விவாதத்தில் இருந்தனர்...
இந்த விஷயத்தில் உங்கள் கருத்து என்ன?
எனது கருத்தின்படி, மக்களுக்கு அதிக வரி விதித்தல் கூடாது.


சரி, நீங்கள் கூறியதைப்போலவே செய்கிறேன்.
இளவரசர் க்ரியான் ஒவ்வொரு விஷயத்திற்கும் அலெக்ஸை கலந்தாலோசித்தே முடிவெடுப்பார்.
அரசர் சிறிது நாட்கள் இளவரசர் க்ரியானுடன் தங்கிவிட்டு இளவரசர் தாமெனின் மாகாணத்திற்குச் சென்றார்.
அரசரும் ஏகஸும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.
அப்போலோ நேற்றைய கலந்துரையாடலில் எனக்கு ஒரு தீவிர எண்ணம் தோன்றியது; உனது பரிந்துரையும் நன்றாகவே இருந்தது ஆனால் நான் எனது எண்ணத்தின்படி செயல்படப்போகிறேன்.
இளவரசர் தாமென் தனது எண்ணத்தின்படி செயல்படுவார் மற்றும் தேவைப்படும் சமயங்களில் மட்டுமே தாமெனுடன் கலந்தாலோசிப்பார்.


அரசரும் ஏகஸும் தங்களது ராஜ்ஜியத்திற்கு திரும்பி வந்தனர்.
ஏகஸ் உங்கள் பதவியை ஏற்கத் தகுதியானவர் யார் என்று நினைக்கிறீர்கள்?
எனது ஆராய்தலின்படி அப்போலோதான் சரியானவன்..
ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள்.
ஏனெனில் இளவரசர் க்ரியோன் அலெக்ஸை மிகவும் சார்ந்துள்ளார். தேர்ந்த மந்திரி அரசனை தன்னை சார்ந்திருக்கச் செய்யமாட்டான்.
ம்ம்ம்ம்....
அதேசமயம் மந்திரியை தாமென் தனது சொந்த முடிவை எடுத்து தேவைப்படும் சமயங்களில் மட்டும் இளவரசரைக் கலந்தாலோசனை செய்கிறார். இது அப்போலோவின் நல்ல குணத்தை காட்டுகிறது.
ஒரு நல்ல மந்திரி அரசர் தனது திறமைகள், அறிவை வளர்ப்பதற்கு உதவுவான், மற்றும் சுதந்திரமான முடிவுகளை எடுப்பதன் மூலம் அவரை ஒரு தேர்ந்த அரசராக உருவாக்குவான்.


அறிவுப்பூர்வமான ஆராய்ச்சி ஏகஸ். எனவே, அப்போலோ உங்களை மாற்றீடு செய்வான்.
ஆம் அரசே, மேலும் நாம் அலெக்ஸை இளவரசர் தாமெனிடம் அனுப்ப வேண்டும்.
சரி புரிகிறது. இளவரசர் தாமெனின் அரசாட்சியின் கீழ் அலெக்ஸ் சரியான வழிகாட்டுதலைப் பெறுவான்.
ஏகஸ், உங்கள் பரிந்துரையை நான் முழுமையாக ஏற்கிறேன். எனக்கு ஒரு கோரிக்கை உள்ளது. உனது ஓய்வின் பின்னரும் தேவைப்படும் சமயங்களில் எனக்கு ஆலோசனை செய்வீரா?
நான் எப்போதுமே உங்களுக்காக இருப்பேன் அரசே.


அரசர் அப்போலோவை மந்திரியாக நியமித்தார்


சில வருடங்கள் கழித்து க்ரியோனும் தானே முடிவுகளை எடுத்து தன் மாகாணத்தை ஆட்சி செய்தான்.


அரசர் தனது ராஜ்ஜியத்தை இருவருக்கும் பிரித்தளித்து தான் ஓய்வு
எடுத்துக்கொண்டார். ஏகஸ் மற்றும் அரசர் இருவரும் ஓய்வுக்குப் பின்
ஒன்றாக நேரம் செலவழித்தனர்.
முற்றிற்று


நன்னம்பிக்கை



மன்னர் நின்டோகு கோஷ நாட்டை ஆண்டு வந்து கொண்டிருந்தார். அவர் கலை மற்றும் இசையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.
நின்டோகுவின் அரசவையில் பல புலவர்கள் இருந்தனர். ஆனால் சுஷுன்தான் மன்னருக்குப் பிடித்தமானவர்.
நன்று சுஷுன்...
சுஷுன் மன்னருக்கு பிடித்தமானவராக இருப்பது, புலவர் சிஷாகிக்கு மிகுந்த பொறாமையை ஏற்படுத்தியது.
அவன் என்னை விடக் குறைந்தவன் என்பதை நிரூபிக்க வேண்டும். ஆனால் எவ்வாறு?
என்ன ஆயிற்று சிஷாகி? ஏன் கலக்கத்துடன் இருக்கிறாய்?
இல்லை .. ஒன்றுமில்லை மன்னா.


ஒரு நாள் ஒரு கலந்துரையாடல் நடந்தது.....
சர் சகிதோவின் பாடலைப் பற்றி உங்களின் கருத்து என்ன? சரி நாம் சுஷுனின் பாடல்களைப் பற்றிய ஒரு கலந்துரையாடலைச் செய்யலாம்?
சுஷுனுக்கு இன்று வேலைப்பளு அதிகம் இருந்ததால் அவர் சோர்வாகக் காணப்படுகிறார்.
மன்னா,சர் சகிதோ ஒரு பெரும்புலவர். ஆனால் நமது அரசவையில் இருக்கும் பாதி புலவர்களுக்கு சர் சகிதோ யார் என்பதே தெரியாது. இவ்வாறு கூறுவதற்கு என்னை மன்னியுங்கள்.
சுஷுனை அவமானப்படுத்துவதற்காகவே காத்திருக்கும் சிகாஷி இதனை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதினார்.
ஆகா!! எனக்குப் புரிந்துவிட்டது.
மன்னியுங்கள் மன்னா.. சிகாஷி இவ்வாறு கூறி அரசவையை அவமானப்படுத்தக் கூடாது.
அவர் அரசவையில் மன்னிப்புக் கேட்க வேண்டும் மன்னா. எனது சக அவைப்புலவர்களை அவர் அவமானப்படுத்திவிட்டார்.


மாமன்னர் நின்டோகு சுஷுனைப் பார்க்கிறார்.
மன்னா நான் எதுவும் தவறாகக் கூறிவிடவில்லை.
நான் தவறாகக் கூறியிருந்தால் நானே முதலில் மன்னிப்புக் கேட்பேன், ஆனால் நான் கூறுவது சரி.
அரசவை முழுவதுமே இந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கியது.
புலவர்கள் சுஷுன் மீது பொறாமை கொண்டு அவரைத் திட்டினர்.
அவர் கூறியது தவறு
அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும்


ஆனால் அட்ஷுஹிகோ என்ற ஒரே ஒரு புலவர் மட்டும் சுஷுனைக் காப்பதற்கு முன்வந்தார்.
சுஷுன் போன்ற மாமேதைகள் எவரையும் புண்படுத்தமாட்டர்.
அவரது கூற்றின் அர்த்தம், "நமது அரசவையில் பாதி புலவர்களுக்கு மட்டுமே சர் சகிதோ பற்றித் தெரியும்.
எனக்கு முழுமையாகப் புரியவில்லை, தயவுசெய்து விவரமாகக் கூறுங்கள்.
நன்றி அட்ஷுஹிகோ, மன்னா இதனைத்தான் நான் கூறினேன்.
விவாதம் நின்றுபோனது, சிகாஷியால் எதுவும் கூற முடியவில்லை.


மன்னா, நீங்கள் அவரது கூற்றை ஒரு பழமொழியுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அது நீங்கள் எவ்வாறு ஒரு பாதி நிரப்பப்பட்ட கோப்பையைப் பார்ப்பீர்கள் என்ற எண்ணத்தில்தான் இருக்கிறது.
ஹ்ம்ம்....
நன்னம்பிக்கை கொண்ட மக்கள் அதனை பாதி நிரம்பிய கோப்பையாகவும் எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள் அதனை பாதி காலியாக உள்ள ஒரு கோப்பையாகவும் பார்ப்பர்.
சிகாஷி சுஷுன் கூறியதை மற்றொரு அர்த்தத்தில் புரிந்து கொண்டுள்ளார். சுஷுன் ஒருபோதும் எவரையும் அவமானப்படுத்த நினைக்கவில்லை.
மன்னா, பிற புலவர்களும் சுஷுனின் கூற்றை ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் எவருக்கும் அவரவரது கருத்தை வெளிப்படையாகக் கூறுகின்ற தைரியம் இல்லை.


அட்ஷுஹிகோவால் சுஷுன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.
மன்னா, அட்ஷுஹிகோ சரியாக விளக்கமளித்தார். நான் ஒரு மாமேதையாக இருக்கலாம். ஆனாலும் நான் அவரது தைரியத்தையும் ஞானத்தையும் பாராட்ட விரும்புகிறேன்.
அட்ஷுஹிகோ அவர்களே, இதனை ஏற்றுக்கொள்ளுங்கள்.
ஆகா நன்றி! நான் மிக்க மகிழ்கிறேன்.
சுஷுன் தனது முத்து மாலையை அட்ஷுஹிகோவிற்குப் பரிசாக அளித்தார்.
அட்ஷுஹிகோ, உண்மையிலேயே உன்னைத் தட்டிக் கொடுக்க வேண்டும், சுஷுன் மற்றவர்களின் நல் குணத்தைப் புரிந்து கொள்வது உண்மையிலேயே சிறந்த ஒன்று.
சிகாஷி, உங்களின் சந்தேகம் தீர்ந்தது என்று நினைக்கிறேன். நம்பிக்கையற்று இருப்பதைவிட நன்னம்பிக்கையுடன் இருப்பது எப்போதுமே நல்லது.
முற்றிற்று

# தேசப்பற்று மற்றும் விசுவாசம்




தோஹாவை தாவூத் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவருக்கு மக்களை விட பெண்கள் மற்றும் மதுவில் மட்டுமே நாட்டம் இருந்தது.
ஃபஹீம் தாவூத்தின் அரசவையில் இருக்கும் ஒரு திறமையான அமைச்சர். அவர் எப்போதுமே மக்களின் நல்வாழ்விற்கே முன்னுரிமை அளிப்பார்.
மன்னர் இல்லாத சமயங்களில் அவரே நாட்டை ஆண்டு வந்தார்.
ஒரு நாள் மன்னர் தாவூத் அமைச்சர் ஃபஹீமை அழைத்தார்.
ஃபஹீம், நமது அண்டை நாட்டு அரசர் அக்தருக்கு ஒரு அழகிய மகள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.
ஆம் மன்னா.



ஃபஹீம்,
எனது திருமண
முன்மொழிவை அவருக்குத்
தெரிவியுங்கள்.
சரி மன்னா.
அமைச்சர் ஃபஹீம் மன்னரின் ஆணையைப் பின்பற்றி அவரது முன்மொழிவை அனுப்பினார்.
மது மாது என்று இருக்கும்
ஒரு மன்னருக்கு நான் எனது
மகளைத் திருமணம் செய்து
கொடுக்க மாட்டேன்.
இதை கேட்டு மன்னர் தாவூத் மிகுந்த கோபமடைகிறார்.
ஃபஹீம், என்ன நினைக்கிறார்
அவர். அவர் தேவையில்லாது அவர்
மீது நான் போர் தொடுப்பதற்கு
என்னைத் தூண்டுகிறார்.
அமைதியாக
இருங்கள்
மன்னா.
மன்னா...
ஒரு பெண்ணிற்காக போர்
தொடுப்பது என்பது சரியல்ல.
இல்லை, அவர்களைத்
தாக்கி மன்னர் அக்தரை என்னிடம்
கொண்டு வாருங்கள்.


ஃபஹீம், நான் உனக்கு அனைத்து உரிமைகளையும் அளித்துள்ளேன். அதனால் நீ என்னை எதிர்த்துப் பேச வேண்டும் என்பது அர்த்தமல்ல.
நான் தவறாகப் பேசியிருந்தால் என்னை மன்னியுங்கள், மன்னா! மக்கள் நலத்தையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே அவ்வாறு கூறினேன்.
நீர் எனக்கு உதவ வேண்டும் என்று நினைத்தால், அவர்களை எவ்வாறு வெற்றி பெறுவது என்று யோசியுங்கள்.
வேறு வழியில்லாமல் ஃபஹீம் அவருக்கு சில யோசனைகளைக் கூறுகிறார்.
மன்னர் தாவூத் மன்னர் அக்தரை எதிர்த்து போரிட்டு தோற்கிறார்.


மன்னர் அக்தர் தோஹாவிற்கு வருகிறார்; அமைச்சர் ஃபஹீம் அவரை வரவேற்கிறார்.
வாருங்கள் மன்னா.
நான்தான் மன்னர் தாவூத்தின் அமைச்சர் ஃபஹீம்.
நான் உங்கள் மன்னரை வீழ்த்தியதை நினைத்து நீங்கள் என் மேல் கோபமாக இருக்கவேண்டுமே.
இல்லை மன்னா, ஒரு போருக்குப் பின்னரான விளைவுகளை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.
ஹ்ம்ம்ம்.... உங்களைப் பார்த்தால் மிகுந்த புத்திசாலி போலத் தோன்றுகிறது ஃபஹீம்.
மன்னர் மன்னா.. உங்களிடம் எனக்கு ஒரு வேண்டுகோள் இருக்கிறது.என்னை உங்களது அமைச்சராக நியமியுங்கள்.
இதைப் பார்த்தால் நீங்கள் உங்கள் மன்னரை விட உங்கள் பதவியையே அதிகம் விரும்புவது போல் தோன்றுகிறதே.


உன்னைப் போன்ற காட்டிக்கொடுப்பவர்களுக்கு என்னுடைய அரசவையில் இடமில்லை.
மன்னா, நீங்கள் மன்னரைப் பற்றி நினைக்கிறீர்கள். ஆனால் நான் எனது மக்களைப் பற்றி நினைக்கிறேன்.
மன்னர் தாவூத் ஒரு பெண்ணுக்காக போரிடச் சென்று அவரது மக்களின் நம்பிக்கையை வீணடித்துவிட்டார். இது போன்ற ஒரு மன்னருக்கு நான் நன்றியுள்ளவனாய் இருக்க விரும்பவில்லை.
மன்னர் அமைச்சர் கூறுவதைக் கூர்ந்து கவனித்தார்.
இந்த தருணத்தில் எனது மக்களுக்கு நான் தேவை மன்னா. அவர்கள் போரினால் நிலைகுலைந்து போயுள்ளனர்.
சரி, ஆனால் நீ எனக்கு நன்றியுடன் உள்ளாய் என்பதை நான் எவ்வாறு நம்புவது.
எனது கவலையெல்லாம் தோஹா மக்களின் நலன் மீதே இருக்கிறது. நீங்கள் அவர்களைச் சரிவரப் பார்த்துக் கொள்ளும் வரை நீங்கள் என்னை நம்பலாம்.


மன்னர் திருப்தியடைந்தார்.
உங்கள் எண்ணத்தைக் கண்டு நான் வியக்கிறேன். நான் உங்களை முழுமையாக நம்புகிறேன். நீங்கள் இனி தோஹா நாட்டின் தலைமை அமைச்சர். நீங்கள் தினசரி நிர்வாகம் முழுவதையும் கவனித்துக் கொள்ளலாம்.
நன்றி மன்னா. நான் உங்களது நம்பிக்கையைக் குலைக்க மாட்டேன்.
ஒரு குறுகிய காலத்திலேயே தோஹா மக்கள் மகிழ்ச்சியாகவும் வளமையாகவும் வாழ்ந்தனர். ஃபஹீம் அவரது தேசப்பற்றையும் விசுவாசத்தையும்
நிரூபித்தார்.
முற்றிற்று



Buy Books & eBooks Online at www.indianvedicschool.com

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com